# மெய்யியல் விசாரணைகளில் பௌதிகவதீதத்தை நீக்குதல்: றூடோல்ஃப் கார்னப்பினதும் ஏ.ஜே.அயரினதும் தர்க்கப் புலனெறிவாதப் பகுப்பாய்வு

சி.நிரோசன்
nirosans@univ.jfn.ac.lk

**ஆய்வுச்சுருக்கம்**

இந்த ஆய்வுக் கட்டுரை றூடோல்∴ப் கார்னப் மற்றும் ஏ.ஜே.அயர் ஆகியோரால் முன்வைக் கப்பட்ட பௌதிகவதீதத்தை நீக்குவதற்கான தர்க்கப் புலனறிவாதத் திட்டத்தை ஆராய்வதாக அமைகின்றது. பௌதிகவதீதக் கூற்றுக்கள் புலன் அனுபவத்திற்கு அப்பாற் பட்ட கடந்தநிலை உண்மைகள் அல்லது யதார்த்தங்களைப் பற்றியவை. அவை விஞ்ஞான பூர்வமானவை அல்ல என்பது மட்டுமல்ல அர்த்தமற்றவையும் ஆகும் என்பது அவர்களின் பொதுவான நம்பிக்கை. மொழியியல் பகுப்பாய்வு மற்றும் வாய்ப்புப்பார்த்தல் கோட்பாடு என்பவற்றைப் பயன்படுத்துவதன் மூலம், அவர்கள் அர்த்தமுள்ள கூற்றுக்களின் எல்லைகளை வரையறுக்க முயன்றனர். கார்னப்பின் விமர்சனம் பௌதிகவதீதத்தில் மொழியைத் தவறாகப் பயன்படுத்துவதில் கவனம் செலுத்துவதோடு பல பௌதிகவதீதச் சொற்கள் வரையறுக்கப்பட்ட அனுபவ உள்ளடக்கத்தைக் கொண்டிருக்கவில்லை அல்லது வாக்கிய அமைப்பு தர்க்க விதிகளை மீறுகின்றன என்றும் வாதிடுகிறது. அனுபவம் மூலம் வாய்ப்புப்பார்க்க முடிந்தால் மட்டுமே கூற்றுக்கள் உண்மைப் பெறுமான ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்தவை என்று வலியுறுத்துவதன் மூலம் அயர் இந்த நிலைப்பாட்டை மேலும் வலுப்படுத்துகிறார். எனவே இரு மெய்யியலாளர்களும் உளவியல் அல்லது கலாச்சார அடிப்படையினால் அன்றி இறுக்கமான தர்க்கம் மற்றும் மொழியியல் அளவுகோல்களினால் பௌதிகவதீதத்தை நிராகரிக்கின்றனர். இந்த ஆய்வுக்கட்டுரையானது அவர்களின் நிலைப்பாட்டிற்குப் பின்னால் உள்ள அறிவுசார் உந்துதல்களை, குறிப்பாக ஹெகலிய கருத்துமுதல்வாதம் போன்ற பௌதிகவதீத மரபுகளுக்கு எதிரான அவர்களின் எதிர்வினையினையும் இயற்கை விஞ்ஞான முறைகளுடன் மெய்யியலை இணைப்பதற்கான அவர்களின் பரந்த விருப்பத்தையும் ஆராய்கிறது. அத்தோடு பிற்கால மெய்யியலாளர்களின் விமர்சனங்களைப் பகுப்பாய்வு செய்வதன் மூலம் கார்னப், அயர் ஆகியோரின் தர்க்கப் புலனறிவாதத் திட்டத்தின் வெற்றி குறித்தும் அதன் வரம்புகள் குறித்தும் இந்த ஆய்வு மேலும் மதிப்பிடுகிறது. இந்த ஆய்வானது முதன்நிலை மற்றும் இரண்டாம் நிலை மெய்யியல் நூல்களின் உரைப் பகுப்பாய்வில் கவனம் செலுத்தும் ஒரு பண்புசார் பகுப்பாய்வு அணுகுமுறையைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது. தர்க்கப் புலனறிவாத விமர்சனத்தின் ஒத்திசைவு மற்றும் வலிதான தன்மையைத் தீர்மானிக்க வாதங்கள் தொடர்பாக தர்க்கரீதியான பகுப்பாய்வு நடத்தப்பட்டுள்ளது. அத்தோடு பௌதிக வதீத விசாரணையின் சமகாலப் பொருத்தப்பாட்டை மதிப்பிடுவதற்காக தர்க்கப் புலனறி வாதத்திற்கான பதில்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. இந்த ஆய்வு கார்னப், அயர் ஆகிய இருவரது சிந்தனைகளும் பாரம்பரிய பௌதிகவதீதத்தில் உள்ள மொழியியல் மற்றும் கருத்தியல் குழப்பங்களைத் தெளிவுபடுத்தி மெய்யியல் விசாரணைகளில் இருந்து பௌதிகவ தீதத்தை நீக்குவதில் அதிக அக்கறையுடன் செயற்பட்டிருந்த போதிலும் அவர்களின் முயற்சி வெற்றியளிக்கவில்லை என்பதனையும் மெய்யியல் உரையாடல்களில் பௌதிகவதீதம் தன்னிருப்பைத் தக்கவைத்துக்கொண்டுள்ளது என்பதனையும் வெளிப்படுத்தி நிற்கின்றது.

**திறவுச் சொற்கள்:** தர்க்கப் புலனறிவாதம், சொல்லகராதித் தவறு, வாக்கிய அமைப்புத் தவறு, மொழித் தவறு மற்றும் வாய்ப்புப்பார்த்தல்

## ஆய்வின் அறிமுகம்

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில், தர்க்கப் புலனறிவாதம் ஒரு புரட்சிகரமான மெய்யியல் இயக்கமாக உருவானது. இப் புதிய சிந்தனைப் பள்ளியின் தோற்றத்துடன் மெய்யியலின் வரலாறு வியத்தகு திருப்பத் தைப் பெற்றுக்கொண்டது. 1912 இல் கேம் பிரிட்ஜில் தொடங்கிய இந்தப் பள்ளி, கடந்த நிலை உண்மைகளை ஆராயும் மெய்யிய லின் முக்கிய துறைகளில் ஒன்றான பௌதிக வதீதம் மெய்யியலுக்கு ஒரு மோசமான கெடுதியாகும் என்று கூறி, உண்மை பற்றிய அதனுடைய வாதங்களை நிராகரித்தது. இது பௌதிகவதீத ஊகங்களை நிராகரிப் பதன் மூலம் மெய்யியலை மீள்வரையறை செய்ய முயன்றது. அனுபவவாதத்திலும் அளவையியலிலும் கொண்டிருந்த ஈடுபாட்டி னால் கார்னப் மற்றும் அயர், பௌதிகவதீதக் கூற்றுகள் வாய்ப்புப்பார்க்கப்பட முடியாதவை என்றும் அதனால் அவை அர்த்தமற்றவை என்றும் வாதிட்டனர். கார்னப் (Carnap) மற்றும் அயர் (Ayer) ஆகியோரால் உருவாக் கப்பட்ட தர்க்கப் புலனறிவாதம் அர்த்தமுள்ள தன்மைக்கான வாய்ப்புப்பார்த்தல் அடிப்படை யிலான அளவுகோலை ஆதரிப்பதன் மூலம் பௌதிகவதீதத்தை அகற்ற முயன்றது. இருப் பினும் இந்த அணுகுமுறை குறிப்பிடத்தக்க விமர்சனங்களை எதிர்கொண்டது. வாய்ப்புப் பார்த்தல் கொள்கையே சுய-தோல்வி என சவால் செய்யப்பட்டு அதனுடைய அனுபவ வாய்ப்புப்பார்த்தல் பற்றி பல கேள்விகள் எழுப்பப்பட்டன. மேலும், பல மெய்யியல் மற்றும் விஞ்ஞானக் கருத்துக்கள் நேரடியாக வாய்ப்புப்பார்க்க முடியாத கருத்தியல் விவா தங்களை உள்ளடக்கியது. இருப்பினும் அவை மெய்யியல் உரையாடலுடன் ஒருங்கிணைந் தவை. தர்க்கப் புலனறிவாதத்தின் ஒரு மூலக் கல்லான பகுப்பு மற்றும் தொகுப்புக் கூற்றுக் களுக்கு இடையிலான கடுமையான பிரிவை அத்தகைய வேறுபாடுகள் தெளிவானவை அல்ல என்று வாதிட்ட W.V.O.குயின் (Quine) போன்ற மெய்யியலாளர்களும் எதிர்த்துள்ள னர். மேலும், தர்க்கப் புலனறிவாதிகளின் முயற்சிகள் பௌதிகவதீதத்தைக் கடுமை யாக விமர்சித்திருந்த போதிலும், மெய்யிய லில் பௌதிகவதீதம் செயலில் உள்ள துறை யாகத் தொடர்கிறது, இது அவர்களின் விமர் சனத்தின் வரம்புகளைப் பரிந்துரைக்கிறது. இந்த ஆய்வு கார்னப் மற்றும் ஏ.ஜே.அயர் ஆகியோரின் நிலைப்பாடுகளை குறிப்பாக அவர்களின் விமர்சனத்தின் மெய்யியல் அடித் தளம், அதன் வரம்புகள் மற்றும் மெய்யியலின் மீதான அதன் பரந்த தாக்கம் என்பவற்றை விமர்சன ரீதியாக மதிப்பிடுவதாக அமைவ தோடு சமகால மெய்யியல் உரையாடல் களில் பௌதிகவதீதம் தனது மெய்யியல் முக்கியத்துவத்தைத் தக்கவைத்துக்கொள் கிறதா என்பதையும் மதிப்பிடுகிறது.

அந்த வகையில் பௌதிகவதீதத்திற்கு எதிராக கார்னப்பும் அயரும் முன்வைக்கும் வாதங்கள் யாவை? தர்க்கப் புலனறிவாதம் அர்த்தமுள்ள கூற்றுகளை எவ்வாறு வரை யறுக்கிறது, மேலும் இந்த வரையறை பௌதிகவதீதக் கூற்றுக்களை எவ்வாறு விலக்குகிறது? பௌதிகவதீதத்தை விலக்கும் தர்க்கப் புலனறிவாத சிந்தனைக்கு எதிரான விமர்சனங்கள் யாவை? சமகால சிந்தனை யில் பௌதிகவதீதம் யாதேனும் தத்துவ முக் கியத்துவத்தைத் தக்கவைத்துக் கொண்டிருக் கிறதா? போன்ற ஆய்வு வினாக்களோடு இந்த ஆய்வுச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படு கின்றன.

பௌதிகவதீதத்திற்கு எதிரான கார்னப்பின தும் அயரினதும் வாதங்களைப் பகுப்பாய்வு செய்தலும், பௌதிகவதீதக் கூற்றுக்களை விலக்குவதில் வாய்ப்புப்பார்த்தலின் வகி பங்கை ஆராய்தலும், சமகால மெய்யியல் உரையாடல்களில் பௌதிகவதீத்தின் பொருத்தப்பாட்டையும் தொடர்ச்சியான செல் வாக்கையும் மதிப்பிடலும் இந்த ஆய்வு நகர்வின் நோக்கங்களாக அமைகின்றன.

இந்த ஆய்வானது முதன்நிலை மற்றும் இரண் டாம் நிலை மெய்யியல் நூல்களின் உரைப் பகுப்பாய்வில் கவனம் செலுத்தும் ஒரு பண்புசார் பகுப்பாய்வு அணுகுமுறையைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது. தர்க் கப் புலனறிவாத விமர்சனத்தின் ஒத்திசைவு மற்றும் வலிதான தன்மையைத் தீர்மானிக்க வாதங்கள் தொடர்பாக தர்க்கரீதியான பகுப்

பாய்வு நடத்தப்பட்டுள்ளது. அத்தோடு பௌதிகவதீத விசாரணையின் சமகாலப் பொருத்தப்பாட்டினை மதிப்பிடுவதற்கு தர்க் கப் புலனறிவாதத்திற்கான சமகால பதில்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

### பௌதிகவதீதம் (Metaphysics)

இருப்பின் உண்மையைத் தேடும் மெய்யிய லின் ஒரு கிளையாக பௌதிகவதீதம் விளங்குகின்றது. அதனுடைய விசாரணைப் புலம் புலன்களுக்கு அப்பாற்பட்டது. அரிஸ் டாட்டில் தொடங்கி மறுமலர்ச்சிக் காலம் வரை, பௌதிகவதீதத்தினது செல்வாக் கானது புலன்கொள்ளக் கூடியவற்றிலிருந்து புலனாகாதது வரை இருந்திருக்கின்றது. பதி னெட்டாம் நூற்றாண்டின் தத்துவஞானியான கான்ட், நாம் உலகத்தை நமக்குத் தோற்ற மளிக்கும் வகையில் உருவாக்குவதால், எம்மால் உள்பொருளை தெரிந்துகொள்ள முடியாது என்று வலியுறுத்துவதன் மூலம் அதுவரை இருந்துவந்த அனைத்துப் பௌதிக வதீத சிந்தனைகளையும் நிர்மூலம் செய்தார். எனவே, புலனாகும் விடயங்களையே நம் மால் அறிந்துகொள்ள முடியாவிட்டால், புலன் களுக்கு அப்பாற்பட்ட விடயங்களை நாம் எப்படி அறிய முடியும்? (Prosch, 1966) ஆனால் ஹெகல் தனது 'முழுநிறைவான கருத்துமுதல் வாதத்தின்' மூலம் பௌதிக வதீதத்தை மறுசீரமைத்தார். (Hegel, 1995) அவருடைய முழுநிறைவான கருத்துமுதல் வாதக் கோட்பாடு ஏனைய அனைத்துப் புறப்பொருட்கள் அல்லது விடயங்களுக்கு மேலாக மனதினை முன்னிறுத்தியது. கான்ட் பயன்படுத்தியது போன்று இயங்கியலின் வழி இணை உரைக்கு நகர்த்துவதன் மூலம் அவர் பௌதிகவதீதத்தின் முறையை மாற்றி யமைத்தார். இந்த இணை உரைக்குள் நுழையும் பொருட்டு அதியுயர் மனம் பொருட் களை உருவாக்குகின்றது எனும் சுய-உணர் வினை அது ஏற்படுத்துகின்றது. ஹெகல் (Hegel) கான்டின் (Kant) எதிர்நிலைகள் பற்றிய கருத்தாக்கத்தினை ஏற்றுக்கொள்கின்றார் (மனமும் உடலும் ஒன்றுக்கொன்று எதிரா னவை அல்லது முரணானவை). இது உரை யும் (Thesis) எதிர்உரையும் (Antithesis) இணைந்து இணை உரையினை (Synthesis) உருவாக்குவதனை அல்லது போராட்டமும் (Struggle) தீர்வுகாணலும் (Resolving) இணைந்து சிறந்த மனக்கருத்தினை உரு வாக்குவதனை உள்ளடக்கியது. இந்தச் செயன்முறை மனம் அதனுடைய முழுநிறை வானநிலையை அடையும் வரை தொடர்கிறது. இந்த நிலையில், முழுநிறைவான மனதின் அம்சங்களான தனிப்பட்ட மனங்கள் முழு நிறைவான கருத்தின் அதியுயர் உண்மை யினை அடைந்துகொள்வதற்கு தடையாக உள்ளவற்றிலிருந்து விடுபடுகின்றன என ஹெகலின் கருத்துமுதல்வாதம் பிரகடனப் படுத்தியது. இவ்வகையான மெய்யியல் சிந்தனைகள் ஊக அறிவைக் கையாளாத பிற துறைகளின் அறிவாராய்ச்சியியல் வாதங் களை வெகுவாகப் பாதித்தது. இத்தகைய நிலைப்பாட்டிலிருந்து மெய்யியலைப் பாது காப்பதற்கு அனுபவ அறிவின் உண்மைத் தன்மையை நிரூபிக்க வேண்டும். வேறு வார்த்தைகளில் கூறுவதாயின் பௌதிகவதீ தத்தின் அடிப்படைகளை இல்லாதொழிக்க வேண்டும்.

### தர்க்கப் புலனறிவாதத்தின் தோற்றுவாய் (Origin of Logical Positivism)

தர்க்கப் புலனறிவாதத்தின் மூல தத்துவம் பகுப்பாய்வு மெய்யியல் ஆகும். 1890 களின் பிற்பகுதியில் கேம்பிரிட்ஜில் உருவான கருத்துகளின் வரலாற்றில் இது ஒரு கட்ட மாகும். இது ஐரோப்பிய மெய்யியலில் ஆதிக் கம் செலுத்திய ஹெகலின் 'முழுநிறைவான கருத்துமுதல் வாதத்திற்கு' எதிரான ஜீ.ஈ.மூர் (G.E.Moore) மற்றும் பேர்ட்டண்ட் ரஸல் (Bertrand Russell) ஆகியோரின் கிளர்ச்சியுடன் ஆரம்பமானது. யதார்த்தவாதத்திற்கு ஆதர வான அவர்களின் தீர்மானம் எதிர்காலத்தில் என்னவாக இருக்கும் என்று அவர்கள் கற் பனை செய்திருக்கவில்லை என்றே கூறவேண் டும். அவர்கள் மொழி மற்றும் சிந்தனையைக் காட்டிலும் உலகத்தைப் பற்றிய சிறப்பானதும் பொதுவானதுமான உண்மைகளைப் பற்றி விவாதிப்பதில் அக்கறை கொண்டிருந்தனர் (Avrum, 2000).

இந்தப் பள்ளியின் இரண்டாம் கட்டம் விக்கின்ஸ்ரைனின் (Wittgenstein) டிராக்டட்ட ஸால் (Tractatus) ஈர்க்கப்பட்டது. ஆனால் அது எவ்வளவு வேகமாக வளர்ச்சி பெற்றதோ அதே வேகத்தில் வீழ்ச்சியடைந்தது. விக் கின்ஸ்ரைனே அதனை நிராகரித்தார். அவர் மெய்யியலின் நோக்கங்கள் மற்றும் இலக்கு களை மீள்வரையறை செய்வதே தனது பணி எனக் கருதினார். மெய்யியலின் பெறுபேறு மெய்யியல் முன்மொழிவுகளின் அல்லது கூற்றுக்களின் எண்ணிக்கை அல்ல, மாறாக முன்மொழிவுகளைதெளிவுபடுத்துவதேஎனக் கருதிய விக்கின்ஸ்ரைன் 'மெய்யியல் தெளி வற்ற மற்றும் மங்கலான சிந்தனைகளை தெளிவாக வரையறுக்க வேண்டும்' (Wittgenstein, 1921) என்றார்.

தர்க்கப் புலனறிவாதம் 1920களின் முற்பகுதி யில் மொரிட்ஸ் ஸ்லிக் (Moritz Schlick), ஓட்டோ நியூரத் (Otto Neurath) மற்றும் விக்ரர் கிரா∴ப்ட் (Victor Kraft) போன்ற பல சிந் தனையாளர்களோடு வியன்னா வட்டத்தில் (Udefi, 2009) தொடங்கியது. தர்க்கப் புலனறி வாத சிந்தனைப் பள்ளியின் தோற்றத்துடன் மெய்யியலின் வரலாறு வியத்தகு திருப்பத் தைப் பெற்றுக்கொண்டது. நவ-ஹெகலியனி சம், மார்க்சிசம், பயன்வழிவாதம் மற்றும் இருத்தலியல் போன்ற மெய்யியற் சிந்தனை கள் ஆதிக்கம் செலுத்தும் ஒரு மெய்யியல் யுகத்தில்தர்க்கப்புலனறிவாதிகளின்படிமெய் யியலாளர்களின் பணி என்ன? இவ்வினா வினை மேலும் இலகுபடுத்தினால்: இந்தச் சிந்தனைப் பள்ளிகள் உண்மை பற்றிய மெய்யியற்பிரச்சினைகளுக்குத்தீர்வளிக்கின் றனவா? தர்க்கப் புலனறிவாதிகள் இந்தச் சிந் தனைகளை மெய்யியலின் ஒரு பகுதியாக பார்க்கவில்லை. எனவே அவற்றை கடுமை யான விமர்சனங்களுக்கு உட்படுத்தினர். அவர் கள் பின்வரும் வாதங்களை முன் வைத்தார்கள்.

> *'நமது அனுபவத்திற்கு அப்பாற்பட்ட விட யங்களின் அதியுயர் யதார்த்தம் (Ultimate Reality) பற்றிய கூற்றுகள் எந்த வகை யிலும் வாய்ப்புப்பார்க்க முடியாதவை என்பதால், பௌதிகவதீதம் அர்த்தமற்ற தாகக் கருதப்படுகிறது (Prosch, 1966). எனவே பயன் வழிவாதிகள் வெறு மனே குழப்பமான உளவியலாளர்கள்...., மார்க்சியம் பிரதானமாக ஒரு புராண வரலாறு மற்றும் கச்சா சமூகவியல். அது ஒரு மெய்யியல் அல்ல..., இருத்தலி யல்வாதிகள்வெறுமனேவெளிப்படையாக உழைக்கிறார்கள், அதேபோல் மனிதன் தனது கட்டுமானத்தை தானே கட்டமைக் கிறான் என்ற உண்மையை மிகைப்படுத்து கின்றார்கள்' (Prosch, 1966)*

பொதுவாகப் பகுப்பாய்வு மெய்யியலாளர் களைப் பொறுத்தவரை மெய்யியல் என்பது ஊகமோ (Speculation) அல்லது உள்ளு ணர்வோ (Intuition) அல்ல மாறாக அது ஒரு முறை (Method). 'விஞ்ஞான அறிவின் பகுப்பாய்வு (An analysis of scientific knowledge), மொழியின் விதிகளால் தீர் மானிக்கப்படும் அர்த்தம் பற்றிய கருத்தாக்கம் (A conception of meaning as determined by the rules of language), சடத்திற்கும் உளத்திற்கும் இடையிலான வேறுபாடு என்பது இரு இருப் புடையவற்றுக்கிடையிலான வேறுபாடு அல்ல மாறாக அது இரு மொழிகளுக்கிடையிலான வேறுபாடு போன்றது எனும் முன்மொழிவு (the thesis distinction between the physical and the mental is not a distinction of two kinds of entities but merely a difference of two languages) என்பன பற்றிய பகுப்பாய்வே மெய்யி யலின் பணி ஆகும்' (Avrum, 2000) என பகுப்பாய்வு மெய்யியலாளர்கள் வாதிட்டனர்.

இத்தகைய தர்க்கப் புலனறிவாதத்தின் வளர்ச் சிக்குப் பங்காற்றிய சிந்தனையாளர்களின் வரிசையில்றூடோல்∴ப்கார்னப்மற்றும்ஏ.ஜே. அயர் போன்றவர்கள் முதன்மையானவர்கள். இவர்கள் மெய்யியல் ஆய்வுப் புலத்திலிருந்து பௌதீகவதீத்தை நீக்கும் பொருட்டு கடுமை யான வாதப்பிரதிவாதங்களை மேற்கொண் டிருத்தனர். அந்தவகையில் றூடோல்∴ப் கார் னப்பினதும் ஏ.ஜே.அயரினதும் சிந்தனைகளை முதலில் பகுப்பாய்வுக்கு உட்படுத்துவோம்.

**றூடோல்ஃப் கார்னப் (Rudolf Carnap)**

கார்னப் 1926 இல் வியன்னா வட்டத்தில் சேர்ந்தார். இரண்டாம் உலகப் போரின்

போது அமெரிக்காவிற்குத் தப்பிச் சென்ற இவர் போருக்குப் பிந்திய அமெரிக்காவைப் பயன்வழிவாதத்திலிருந்து தர்க்கப் புலனறி வாதத்திற்கு மாற்றுவதில் முக்கிய பங்கு வகித்தார். 'பௌதிகவதீதத்தை நீக்குதல்' (Elimination of Metaphysics) என்ற தனது நூலில், கார்னப் பௌதிகவதீதத்தின் மாயையான தன்மையை அம்பலப்படுத்துகிறார். அதேசமயம் பௌதிகவதீதத்தை விமர்சிப்பவர்கள் அனுபவ அறிவுக்கு முரணானது என்பதனால் அது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று என்று கூறுகிறார்கள். சிலர் அதனை நிச்சயமற்ற தன்மைகளால் நிரப்பப்பட்ட ஒரு துறையாக பார்க்கிறார்கள், வேறுசிலர் அதை 'வெறுமனே மலட்டுத்தனம்' (Carnap, 1947) என்று அழைக்கிறார்கள். மாறாக, கார்னப், இந்த விமர்சனங்களைத் தத்துவ ஆர்வம் இல்லாததாகக் கருதுகிறார். மெய்யியலில் ஈடுபடுதல் என்பது பௌதிகவதீத எடுப்புக்களை (Metaphysical Propositions) பிரயோக அளவையியல் மற்றும் கணிதம் என்பவற்றைப் பயன்படுத்தி அவற்றின் வலிதான தன்மை மற்றும் நியாயப்படுத்தல்கள் என்பவற்றைப் பகுப்பாய்வு செய்வதாக அமைதல் வேண்டும். அத்தகைய பகுப்பாய்வின் போது அனைத்து விஞ்ஞானக் கூற்றுக்களும் ஒரு நேர்மறையான பெறுபேற்றினைத் தரும்போது பௌதிகவதீதக் கூற்றுக்கள் (Metaphysical Statements) எதிர்மறையான பெறுபேற்றினைத் தருகின்றன எனக் கார் னப் விளக்கினார். இந்த அடிப்படையில் கூற்றுக்கள் அர்த்தமுள்ளவை அர்த்தமற்றவை எனப் பிரிக்கப்படுகின்றன.

கார்னப்பைப் பொறுத்தவரை, அர்த்தமுள்ள கூற்றுகள் இரண்டு வகை. முதலாவது, அவற்றின் இயல்பிலேயே உண்மையாகவோ அல்லது பொய்யானதாகவோ இருக்கும் கூறியதுகூறல் எடுப்புக்கள். உதாரணமாக, 'ஒரு மரம் ஒரு தாவரம்' அல்லது '1101=2'. கணிதம் மற்றும் அளவையியல் கூற்றுக்கள் இந்த வகைக்குள் அடங்கும். இரண்டாவது வகை அனுபவக் கூற்றுக்களைக் கொண்டுள்ளது. அதன் உண்மை அல்லது பொய்யானது அவற்றின் நெறிமுறை அறிக்கைகள் மற்றும் அனுபவத்தில் தங்கியுள்ளது. உதாரணமாக, 'குளோரோகுயின் அனைத்து வகையான மலேரியா நோய்த்தொற்றுகளுக்கும் சிகிச்சையளிக்கிறது' என்பது அனுபவபூர்வமாக சோதிக்கப்பட்டால் மட்டும் உண்மை உறுதிப்படுத்தப்படுமே அன்றி சொற்களின் ஒழுங்குபடுத்தலால் அல்ல.

பௌதிகவதீதக் கூற்றுக்களின் அர்த்தமற்ற தன்மையை நிரூபிக்க, அந்தக் கூற்றுக்களை நாம் பகுப்பாய்வு செய்ய வேண்டும். அதற்கு முன், கூற்று (Statement) என்றால் என்ன மற்றும் அதன் பகுதிகள் யாவை என்பவற்றை வரையறுக்க வேண்டியது அவசியம். ஒரு மொழிக்குள் ஒரு கூற்றானது இரண்டு முக்கியமான விடயங்களைக் கொண்டுள்ளது: சொல்லகராதி (Vocabulary) மற்றும் வாக்கிய அமைப்பு (Syntex).

### சொல்லகராதித் தவறுகள் (Errors in Vocabulary)

சொல்லகராதி என்பது ஒரு மொழியில் உள்ள சொற்களின் பட்டியல் என்பதோடு ஒவ்வொரு வார்த்தையும் அதன் பயன்பாட்டின் தொடக்கத்திலிருந்து நிர்ணயிக்கப்பட்ட ஒரு அர்த்தத்தையும் வரையறையையும் கொண்டுள்ளது (Carnap, 1947). பௌதிகவதீதத்தின் கண்ணி (Snare of Metaphysics) என்பது அர்த்தம் இருப்பதாக தவறாக நம்பப்படும் சொற்களைப் பயன்படுத்துவதில் உள்ளது. ஆனால் ஒரு சொல்லுக்கு எப்படி தவறான அர்த்தம் இருக்கும்? 'வரலாற்று வளர்ச்சியிப் போக்கில், ஒரு சொல் அதன் அர்த்தத்தை அடிக்கடி மாற்றிக்கொள்கிறது (தமிழ் மொழியில் உதாரணமாக நாற்றம் என்ற சொல்) என்று வரலாறு கூறுகிறது. மேலும் சில சமயங்களில் ஒரு சொல் புதியதொரு அர்த்தத்தைப் பெறாமலேயே பழைய அர்த்தத்தை இழந்துவிடுவதும் நடக்கும். இதுவே சொற்களின் போலிக் கருத்தின் (Pseudo-Concept of Words) தோற்றம்' (Carnap, 1947).

பௌதிகவதீதக் கூற்றுக்களின் போலித் தன்மையைகட்டவிழ்க்க, கார்னப்சொற்களின் அர்த்தத்தில் கவனம் செலுத்துகின்றார். ஒரு சொல்லின் பொதுவான விளக்கம் என்ன வென்றால், அது ஒரு நிலையான வாக்கிய அமைப்பினை அல்லது நிலையான அடிப்

படை வாக்கியத்தைக் கொண்டிருக்க வேண்டும். உதாரணமாக, ஒரு பழம் என்ற சொல்லின் அடிப்படை வாக்கியம் 'X ஒரு பழம்'. இது நிலையானது. இரண்டாவதாக, அடிப்படையில் ஒரு கூற்று (P என்ற கூற்று) நான்கு முக்கிய கேள்விகளுக்கு பதிலளிக்கக்கூடியதாக இருக்க வேண்டும். அவை அவற்றின் வலிதான தன்மையை அளவிடும் அளவுகோல்களாகும்:

1. அதீத அளவையியல் வடிவம் (Metalogical Formulation) P இலிருந்து உய்த்தறியக்கூடிய வாக்கியங்கள் எவை என்றும் P ஐ உய்த்தறியக்கூடிய வாக்கியங்கள் எவை என்றும் வினவுகின்றது. உய்த்தறியக்கூடிய கூற்றுக்கள் நெறிமுறைக் கூற்றுக்கள் என்று அழைக்கப்படுகின்றன.
2. தர்க்கத்தின் சொற்றொடரானது, எத்தகைய நிபந்தனைகளின் கீழ் P என்பது உண்மை என்றோ அல்லது பொய் என்றோ தீர்மானிக்கப்படுகின்றது என்பதனை வினவுகின்றது.
3. அறிவாராய்ச்சியியலின் சொற்றொடரானது P என்பது எவ்வாறு உறுதிப்படுத்தப்படலாம் அல்லது சரிபார்க்கப்படலாம் என்பதனை வினவுகின்றது.
4. தோற்றப்பாட்டியல் P யின் அர்த்தத்தை வினவுகின்றது.

பழம் என்பதனை 'விதையைச் சுமக்கும் தாவரத்தின் பகுதி' என்று நாம் வரையறுக்கும்போது, அதன் அடிப்படைக் கூற்று "X என்பது ஒரு பழம்' என்பதாகும். X ஒரு தாவரத்தின் ஒரு பகுதியாக இருந்து அது விதைகளைச் சுமந்தால் மட்டுமே X ஒரு பழம் என்று நாம் ஊகிக்க முடியும். மாறாக, ஒவ்வொரு நெறிமுறைக் கூற்றுக்களும் அதன் மூலக் கூற்றிலிருந்து ஊகிக்கப்படலாம்.

நாம் X உடன் தொடர்புகொள்ளும் போது மேலே உள்ள கூற்றுக்களை அனுபவபூர்வமாக வாய்ப்புப்பார்க்கலாம். எனவே பழம் என்ற சொல்லின் அர்த்தம் நிலையானது, அதன் பயன்பாடு ஒரு நிலையான எல்லைக்குள் உள்ளது. எனவே 'பழம்' என்ற சொல்லை அதன் வரையறுக்கப்பட்ட அர்த்தத்திற்கு வெளியே பயன்படுத்த ஒருவருக்கு சுதந்திரம் இல்லை.

பௌதிகவதீதச் சொற்களின் போலித் தன்மையை காட்டுவதற்கு 'அடிப்படை' (Principle) என்ற பிரதானமான பௌதிகவதீதச் சொல்லை கார்னப் பயன்படுத்துகின்றார். அவரைப் பொறுத்தவரை, பௌதிகவதீத வாதிகள் கூறுவது: (a) A இலிருந்து B உருவாகும்போது A படிவம் B ஆக இருப்பதற்குரிய அடிப்படையாகும். பகுப்பாய்வின் போது, 'A என்பது ஒரு அடிப்படையாகும்' என்ற பிரதான கூற்றை நாம் பெறுகிறோம், அதில் இருந்து நெறிமுறை அறிக்கைகளை நாம் அறியலாம். B ஆக இருப்பதற்கு A காரணமாகும் அல்லது B இன் இருப்பு A இன் இருப்பில் தங்கியுள்ளது. A, B இற்குக் காரணமாக இருப்பதோடு A இலிருந்து B உருவாகியிருந்தால் மட்டுமே (a) என்ற கூற்று உண்மையாக இருக்கும்.

'தோன்றுதல்' (Arise) என்ற சொல்லின் பகுப்பாய்வின் போது, A இன் இருப்பை அடிக்கடி B முன்னிலையில் பின்பற்றினால் மட்டுமே அந்த கூற்றின் உண்மை நிலைத்திருக்கும். அதாவது A மற்றும் B க்கு இடையே ஒரு காரணகாரியத் தொடர்பு இருக்க வேண்டும். ஆனால் இதற்கு, A மற்றும் B இடையே அனுபவ ரீதியாக கவனிக்கக்கூடிய உறவு இல்லை, மாறாக அவை புலன் அனுபவத்தை தாண்டிய அல்லது கடந்தநிலையிலான ஒரு தொடர்பைக் கொண்டுள்ளன என்று பௌதிகவதீதவாதிகள் பதிலளிக்கின்றனர் (Carnap, 1947). இதனைப் பகுப்பாய்வுக்கு உட்படுத்திய கார்னப், பௌதிகவதீதவியலாளர்கள் மொழியியல் எல்லைகளைத் தாண்டிச் சொற்களைத் தவறாகப் பயன்படுத்தியிருப்பது தெளிவாகின்றது என்கின்றார்.

பௌதிகவதீதவியலாளர்கள் இதற்குப் பதிலளிக்கும் போது கார்னப் 'அடிப்படை' என்ற சொல்லின் உண்மையான அர்த்தத்தைப் பறித்துவிட்டார் என்றும், அவர் அந்தச் சொல்லைப் பயன்படுத்தும்போது அதற்கு என்ன அர்த்தம் என்பதனை வரையறுக்கவில்லை என்றும் வாதிட்டனர். எனவே, இது

ஒரு வெற்றுக்கலன் (Carnap, 1947). மேலும், அவர் ஒரு சொல்லைக் கண்டுபிடித்து, அந்தச் சொல்லின் அனுபவமற்ற தன்மையை வெளிப் படுத்தியிருப்பதால், அந்தச் சொல்லை உண்மையிலேயே அர்த்தமற்றதாக மாற்றும் கூற்றையும் அனுபவபூர்வமாகச் சரிபார்க்க முடியவில்லை. 'முழுமையானது', 'கடவுள்', 'கருத்து', 'எல்லையற்றது' ஆகியவை மொழி யின் விதிகளை மீறும் வேறு சில பௌதிக வதீதச் சொற்கள். எனவே அவற்றைப் பற்றிய எந்த விசாரணையும் வெறும் தவறான கருத்து அல்லது மனக் கற்பிதங்கள் மற்றும் உணர்வுகளின் வெளிப்பாடாகும் (Carnap, 1947).

### வாக்கிய அமைப்புத் தவறு (Syntex Error)

பல சந்தர்ப்பங்களில் பௌதிகவதீதக் கூற்று கள் மொழி இலக்கணத்தில் பயன்படுத்தப் படும் அர்த்தமுள்ள சொற்களைக் கொண் டுள்ளன. ஆனால் சொற்களின் ஒழுங் கமைப்பில் அவை அர்த்தமற்றதாக இருக் கின்றன. இது மொழியை நிர்வகிக்கும் வாக் கிய அமைப்பு விதிகளின் தவறான பயன் பாடு என்பது தெளிவாகும். ஹைடேகரின் 'ஒன்றுமில்லை' (Nothing) என்ற சொல்லின் தொடர்ச்சியான பிரயோகத்தை கார்னப் நேரடியாகத் தாக்குகின்றார். வழக்கமாக 'ஒன்றுமில்லை' என்ற வார்த்தையின் பயன் பாடு, இருப்பைக் கொண்ட ஒன்றை விவரிப் பது அல்ல, அதாவது அது எதிர்மறையை உறுதிப்படுத்த பயன்படுகிறது. ஆனால் ஹைடேகர் உண்மையான ஒன்றை, ஏற் கனவே உள்ள ஒன்றை உறுதிப்படுத்த, ஒரு வாக்கியத்தில் ஒரு எழுவாயின் நிலையை எடுத்து, ஒரு பெயர்ச்சொல்லில் விவரிக்கப் படுவதை உறுதிப்படுத்த 'ஒன்றுமில்லை' என்று பயன்படுத்துகிறார். உதாரணமாக, 'நாம் தேடுவது எதுவுமில்லை' (We seek the nothing) 'நாம் கண்டுபிடிப்பது எதுவு மில்லை' (We find the nothing) 'நாம் அறி வது எதுவுமில்லை' (We know the nothing) (Carnap, 1947, p. 69). மேலும் 'நான் சிந் திக்கின்றேன்' என்பதிலிருந்து 'நான் இருக் கிறேன்' என்பதனை அனுமானிக்கும் டேக் காட்டின் தாவுதல் போன்று 'இருக்க வேண் டும்' (to be) என்ற வினைச்சொல்லை தவறாகப் பயன்படுத்துவது பெரும்பாலும் நடைபெறு கின்றது.

பௌதிகவதீதத்தின் குறைபாடுகள் அடை யாளம் காணப்பட்டதால், கார்னப் இந்தத் துறையை அது என்னவாக இருக்கின்றது என்றும், அது என்னவாக இல்லை என்றும் விளக்குகிறார். அவரைப் பொறுத்தவரை பௌதிகவதீதம் ஒரு விசித்திரமான கற்பனைக் கதைகூட அல்ல, ஏனென்றால் அவை தர்க் கத்துடன் முரண்படுவதில்லை, மாறாக அனு பவத்துடன் மட்டுமே முரண்படுகின்றன. ஆனால் பௌதிகவதீதம் தர்க்கம் மற்றும் அனுபவம் ஆகிய இரண்டிற்கும் முரணா னது. இது மூடநம்பிக்கையோ எனில் அதுவு மல்ல. ஏனென்றால் மூடநம்பிக்கை உண் மையாகவோ அல்லது பொய்யாகவோ இருக் கலாம், ஆனால் பௌதிகவதீதக் கூற்றுக்கள் உண்மையோ பொய்யோ அல்ல. அவை முற்றிலும் அர்த்தமற்றவை. இறுதியாக, பௌதிகவதீதம் என்பது வாழ்க்கையின் மாறுபாடுகள் குறித்த நமது அணுகுமுறையின் பூரணமான வெளிப்பாடு என்று கார்னப் கூறு கிறார். இது கிரேக்க புராணங்களில் அதன் வேர்களைக் கொண்டுள்ளது. பௌதிகவதீத வியலாளர்கள் தங்கள் கூற்றுகளை உணர்ச்சி கள் என்று ஒப்புக்கொண்டால் அவற்றை நிரா கரிக்க வேண்டிய தேவை எமக்கு ஏற்படாது. ஏனென்றால் பௌதிகவதீதத்தை ஒரு கலை வடிவமாக நாம் பார்க்க வாய்ப்புள்ளது. ஆனால் அவர்களின் வாதங்களை உறுதிப் படுத்துவதில், அவர்கள் தொடர்ந்தும் இருட் டில் தத்தளிக்கிறார்கள் (Carnap, 1947) என்று கார்னப் வாதிடுகின்றார்.

### ஏ.ஜே. அயரின் அணுகுமுறை

ஏ.ஜே. அயர் இரண்டாம் உலகப் போரின் தொடக்கத்தில் வியன்னா வட்டத்திற்குள் நுழைந்தார். 'மொழி, உண்மை மற்றும் தர்க்கம்' (Language, Truth and Logic) என்ற நூ லில் அவர் ஒரு மெய்யியலாளனின் பணியைப் பற்றிய தனது சொந்த விளக்கத்தைக் கோடிட்டுக் காட்டுகிறார். பௌதிகவதீதம் பற்றிய அவரது அணுகுமுறையில், பௌதிக வதீத வாதங்களின் ஆதாரம், அவை கட்

டமைக்கப்படுவதற்கான எடுகூற்றுக்கள் என்பன பற்றி அவர் வினவுகின்றார். அவரைப் பொறுத்தவரை, பகுத்தறிவு உள்ள மனிதர்களாகிய நாம் புலன் அனுபவத்திலிருந்து தொடங்கி புலன்களுக்கு அப்பாற்பட்ட ஒரு மண்டலத்தில் முடிப்பது எவ்வளவு சாத்தியம்? இது அப்பால் உள்ள உலகத்தைத் ஊடுருவும் அறிவார்ந்த உள்ளுணர்வின் உயர்ந்த பண்புகளைக் கொண்ட பௌதிகவதீதவாதிகளின் வாதங்களுக்கு முன்னால் கேட்கப்பட வேண்டிய சரியான கேள்வி.

கான்ட் தனது கடந்தநிலை அனுபவவாதக் கோட்பாட்டில், சாத்தியமான அனுபவத்தின் வரம்புகளுக்கு அப்பால் வெளியேறி, தங்களுக்குள்ளேயே விடயங்களைச் சமாளிக்க முயற்சிக்கும் போது, முரண்பாடாக தன்னை இழக்கும் விதத்தில் மனித புரிதல் அமைக்கப்பட்டுள்ளது என்று வாதிடுகிறார். 'தோற்றப்பாட்டியல் உலகத்திற்கு அப்பால் ஊடுருவிச் செல்லும் அற்புதமான சக்தியை நம் மனங்கள் பெற்றிருக்க முடியாது என்பதல்ல, ஆனால் உண்மையில் அவை அரிதானவையாகவோ அல்லது அவற்றிலிருந்து சுதந்திரமானவையாகவோ இருந்தன' (Ayer, 1952, p. 34). எனவே அவர் கடந்தநிலைப் பௌதிகவதீதத்தின் சாத்தியத்தை தர்க்கத்தின் அடிப்படையில் அன்றி உண்மையின் விடயங்களை அடிப்படையாகக்கொண்டு நிராகரித்தார். விக்கின்ஸ்ரைனைப் பொறுத்தவரை, 'ஒரு விடயம் குறித்த சிந்தனைக்கு எல்லையை வரைய நாம் அதன் எல்லைக்கு உள்ளும் புறமும் சிந்திக்க வேண்டும்' என்பதனால் பௌதிகவதீதவாதிகளின் அனைத்துக் கூற்றுகளும் ஏற்றுக்கொள்ளப்படலாம் (Wittgenstein, 1921, p. 1) என்பதோடு அதற்கு நாம் இரு பக்க அனுபவங்களையும் கொண்டிருக்க வேண்டும். ஆனால் எல்லைக்கு வெளியே அதன் மறுபக்கத்தை நாம் அனுபவிக்காததால் பௌதிகவதீதம் பற்றிப் பேசுவது நியாயமற்றது.

ஒருவருக்கு அவர் விரும்பும் அளவுக்கு அனுமானங்களைச் மேற்கொள்ளச் சுதந்திரம் உள்ளது. ஆனால் கருத்திற்கொள்ள வேண்டியது என்னவென்றால், பெற்றுக்கொள்ளப்பட்ட முடிவுகூற்று உண்மையா அல்லது பொய்யா என்பதுதான். ஆகவே, அயர் பௌதிகவதீதத்தை நிராகரிப்பதற்காக மொழிப் பகுப்பாய்வினை அடிப்படையாக எடுத்துக்கொண்டார். அதாவது மனித மனதின் உண்மையான அமைப்பைப் பற்றிய உளவியல் கருதுகோளை எடுத்துக்கொள்ளாமல் ஒரு மொழியின் நேரடியான முக்கியத்துவத்தை நிர்ணயிக்கும் விதியிலிருந்து தனது பகுப்பாய்வினை தொடங்குகின்றார் (Ayer, 1952).

**மொழித் தவறு**

பதங்களைக் கண்டுபிடித்து அவை எதனையும் விபரிக்கவில்லை என்பது தெளிவாக இருப்பினும் அவற்றை யதார்த்தத்துடன் தொடர்புபடுத்துவதனால் பௌதிகவதீதவியலாளர்களுக்கு மொழி டிமென்ஷியா இருப்பது சாத்தியமில்லை என்று அயர் கேலி செய்கின்றார். பௌதிகவதீதத்தின் அடிப்படை விடயம் புறப்பொருள் எனும் கருத்தோடு அரிஸ்ரோட்டில் மற்றும் தோமஸ் அக்குவனஸ் ஆகியோர் பௌதிகவதீதம் பற்றிய தமது ஆய்வைத் தொடங்குகிறார்கள் (Reith, 1958). ஆகவே, பௌதிகவதீதத்தின் முதன்மைப் பணி புலனாகும் விடயங்களுடன் தொடர்புகளைக் கொண்டுள்ள ஆனால் புலனாகாத விடயங்களைக் கையாள்வதாகும். பௌதிகவதீதமெய்யியலாளர்களைப் பொறுத்தவரை ஒரு பொருளின் உண்மைத் தன்மைக்கும் அதன் புலக்காட்சிக்கும் இடையே வேறுபாடு உள்ளது. அதுவே புலனாகும் தோற்றம் (sensible appearances) என்று நாம் குறிப்பிடும் விடயமாகும். இங்கு சவால் என்னவென்றால்: புலன் தோற்றத்திற்கும் புலப்படாத பொருளுக்கும் இடையே உள்ள தர்க்கரீதியான தொடர்பு என்ன, உண்மை மற்றும் பொருளுக்கு இடையே உள்ள விடயம் என்ன? பொருள் பற்றிய கருத்தை மொழியியல் தவறாகவோ அல்லது முற்றிலும் மிதமிஞ்சியதாகவோ மாற்றக்கூடிய புலன் தோற்றத்தின் மொத்தத்துவத்தினால் பொருளை வரையறை செய்ய முடியாதா? என்பனவாகும்.

அயர் மற்றும் தர்க்கப் புலனறிவாதிகள் இதனை நிராகரிக்கின்றனர். அவர்களைப்

பொறுத்தவரை, இது ‘எளிய உட்பொருளுக்கும்’ தோற்றங்களுக்கும் இடையிலான உறவு அல்ல, மாறாக தோற்றங்களுக்கிடையேயான உறவே ஆகும் (வடிவம், நிறம், அளவு, அடர்த்தி, நுணுக்கம் போன்றவை). ஒரு பொருள், பொருள் என்ற கருத்தினால் அல்லது அது பொருள் என்று அழைக்கப்படுவதனால் இருப்புடையது அல்ல. ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய பௌதிக ரீதியான புலனாகக்கூடிய தோற்றங்களினாலும் அத்தகைய தோற்றங்கள் பொருட்களின் பண்புகளாக இருப்பதனாலுமே அவை இருப்புடையன என்றாகின்றன. இருப்பை (Existance) ஒரு பண்பாக நினைப்பது பௌதிகவதீதவாதிகளின் தவறு. மாறாக, இருப்பு என்பது ஒருபொருளின்பண்புகளுக்கிடையிலான உறவின் கூட்டுத்தொகையாகும். உதாரணமாக:

1. பந்து கோளவடிவமானது
2. பந்து இருப்புடையது

முதல் கூற்று, கோளவடிவமானது என்பது பந்தின் ஒரு பண்பு என்றும், மற்றைய பண்புகளுடன் இணைந்து, பந்து இருப்புடைய ஒரு பொருள் என்றும் கூறுகிறது. இருப்புள்ள ஒன்று மட்டுமே கோளவடிவமாக இருக்க முடியும் என்பதால், முதலாவது கூற்றில் இருப்பு மறைமுகமாக வலியுறுத்தப்படுகிறது. இரண்டாவது கூற்று, ஒரு பௌதிகவதீதக் கூற்று, ஒரு மொழிவிபத்து. தோற்றத்தைக் கருத்திற் கொள்ளாமல் பந்தினுடைய இருப்பைத் தேடலாம் என்பதை அது குறிக்கிறது. உண்மையில் ‘பந்து’ என்ற சொல்லின் வரை விலக்கணமானது கண்ணுக்குத் தெரியாத இருப்பிலிருந்து பெறப்படக்கூடியது அல்ல, அது புலனாகக் கூடிய பண்புகளில் இருந்து பெறப்பட வேண்டும். ‘மேசை உள்ளது’ (Table exists), ‘தண்ணீர் உள்ளது’ (Water exists) போன்ற கூற்றுக்கள் மொழியியல் விதிகளின் தவறான பயன்பாடாக மாறி மக்களை ஏமாற்றுகிறது.

மற்றொரு சந்தர்ப்பத்தில், பௌதிகவதீத வாதிகள் மொழியின் விதிகளுக்குக் கீழ்ப் படிகின்றனர். ஆனால் புலச்சார்பற்ற விடயங்களைப் பற்றிய சொற்களைப் பயன்படுத்துகின்றனர். பௌதிகவதீதவாதிகளைப்பொறுத்தவரை ‘பறக்கும் குதிரைகள் புராண மிருகங்கள்’ என்ற கூற்று பறக்கும் குதிரைகள் இருப்பதைக் குறிக்கிறது. மேற்குறித்த கூற்றைப் போன்ற அதே அமைப்பைக் கொண்ட ‘பென்சில்கள் நீளமானவை’, ‘மனிதர்கள் இறப்பவர்கள்’ போன்ற இணையான கூற்றுக்களை அவர்கள் உதாரணம் காட்டுகின்றனர். இந்தக் கூற்றுக்களில் பயனிலைகளால் அல்லது பண்புகளால் (‘நீளமானவை’, ‘இறப்பவர்கள்’) ‘பென்சில்கள்’, ‘மனிதர்கள்’ போன்றவற்றின் இருப்புக் கணிக்கப்படுவது போல, புராண மிருகங்கள் எனும் பண்பினால் பறக்கும் குதிரையின் இருப்புக் கணிக்கப்படுவதாக அவர்கள் கருதுகின்றனர். கடவுள், தேவதைகள், ஆன்மா, சொர்க்கம் போன்றவற்றின் இருப்பை நிறுவ இந்த வாதமுறை நீண்ட பயன்பாட்டைக் கொண்டதாக எடுத்தாளப்படுகின்றது.

### வாய்ப்புப்பார்த்தல் கோட்பாடு (Theory of Verification)

அயர் ஏனைய தர்க்கப் புலனறிவாதிகளைப் போலவே கூற்றுகளினுடைய உண்மைத் தன்மையினை சோதிப்பதற்கான அளவுகோலாக அல்லது வரையறையாக வாய்ப்புப்பார்த்தல் கோட்பாட்டினை முன்மொழிகின்றார்.

> ‘ஒரு கூற்றை அல்லது முன்மொழிவை எவ்வாறு வாய்ப்புப்பார்ப்பது என்று ஒருவர் அறிந்திருந்தால் மட்டுமே அதாவது சில நிபந்தனைகளின் கீழ் ஒரு கூற்றை உண்மை என்று ஏற்றுக்கொள்ளவோ அல்லது பொய் என்று நிராகரிக்கவோ எத்தகைய அவதானம் ஒருவரை வழி நடத்தும் என்று ஒருவர் அறிந்திருந்தால் மட்டுமே அந்த நபருக்கு உண்மையிலேயே அந்த வாக்கியம் அல்லது கூற்று முக்கியத்துவம் வாய்ந்தது என்று நாம் கூறுவோம்’ (Ayer, 1952, p. 35).

ஒரு கூற்று இந்த வரையறைக்கு அல்லது அளவுகோலுக்குக்குறைவானதாகஇருந்தால் அதனை வெறுமனே உணர்ச்சிக் கூற்றுக்கள் போன்று போலியான கூற்றுக்கள் (Pseudo-statement) என்பர்.

வாய்ப்புப்பார்த்தல் என்ற சொல்லைப் பயன்படுத்துவதில் இரண்டு வேறுபாடுகளை அவர்

விளக்குகிறார். முதலாவது நடைமுறையில் வாய்ப்புப்பார்த்தல் (practical verifiability). இது எளிதில் கிடைக்கக்கூடிய புலன் அனுபவத்தின் மூலம் வாய்ப்புப்பார்க்கும் திறந்த நிலை ஆகும். உதாரணமாக, 'x ஒரு பாறை' என்ற கூற்று எப்பொழுதும் உடனடியாகப் புலன் அனுபவத்திற்கு உட்படுத்தக்கூடியது. இரண்டாவது கொள்கையளவில் வாய்ப்புப் பார்த்தல் (verifiability in principle) என்று அழைக்கப்படுகிறது. இது ஒரு வகையான வாய்ப்புப்பார்த்தல் ஆகும். இதன் மூலம் அறிக்கைகள் அல்லது கூற்றுக்கள் இன்னும் வாய்ப்புப்பார்க்கப்படவில்லை, ஆனால் வாய்ப்புப்பார்த்தலுக்குத் திறந்திருக்கும். உதாரணமாக, நமது விண்மீன் மண்டலத்திற்கு அப்பால் செயற்கைக்கோள்கள் இருப்பதாக நாம் கூறும்போது, இந்த செயற்கைக் கோள்கள் இருப்பதை நாங்கள் உறுதியாக அறிவோம் என்று கூறுவதில்லை, ஆனால் அந்த கூற்று எதிர்காலத்தில் அதிநவீன தொழில்நுட்பத்தின் வளர்ச்சியுடன் வாய்ப்புப் பார்க்கப்படும்.

இந்த அடிப்படையில் ஏ.ஜே.அயர் இரண்டு வகையாக வாய்ப்புப்பார்ப்புத் தன்மையை வேறுபடுத்துகிறார்: வலிமையானது மற்றும் பலவீனமானது. வலுவான அர்த்தத்தில் ஒரு அறிக்கையின் உண்மையை நேரடி அனுபவத்தின் மூலம் முழுமையாகவும் உறுதியாகவும் உறுதிப்படுத்த முடிந்தால் மட்டுமே வாய்ப்புப்பார்க்க முடியும். இருப்பினும், பலவீனமான அர்த்தத்தில், அனுபவம் அதை சாத்தியமானதாகவோ அல்லது நம்பத்தகுந்ததாகவோ மாற்றினால், உறுதியாக நிரூபிக்கப்படாவிட்டாலும் கூட, ஒரு கூற்று வாய்ப்புப் பார்க்கப்படக்கூடியதாகக் கருதப்படுகிறது.

வாய்ப்புப் பார்த்தலின் வலுவான உணர்வை நாம் ஏற்றுக்கொண்டால், நாம் பொதுவாக உண்மை என்று ஏற்றுக்கொள்வதில் பெரும்பாலானவை நிராகரிக்கப்பட வேண்டும். ஏனெனில் மிகச் சில விடயங்களை மட்டுமே முழுமையான உறுதியுடன் நிரூபிக்க முடியும். எடுத்துக்காட்டாக, மீண்டும் மீண்டும் மேற்கொள்ளப்படும் அவதானிப்புகளை அடிப்படையாகக் கொண்ட உய்த்தறி முடிவுகள் அனைத்தும் தோல்வியடையும், ஏனென்றால் எவ்வளவு அடிக்கடி குறித்த விடயம் நடந்தாலும், அது எப்போதும் அப்படித்தான் நடக்கும் என்று நாம் ஒருபோதும் உறுதியாக இருக்க முடியாது. எனவே, வாய்ப்புப்பார்த்தலின் பலவீனமான உணர்வு மிகவும் நியாயமானதாகத் தோன்றுகின்றது. ஏனெனில் அவதானிப்புகள் அவற்றின் உண்மை அல்லது பொய்யை மதிப்பிடுவதற்கு பொருத்தமானதாக இருந்தால் கூற்றுக்களை அர்த்தமுள்ளதாகக் கருத இது நம்மை அனுமதிக்கிறது (A putative statement is one a statement believed or acceptable by most people).

எவ்வாறிருப்பினும் அயரின் கூற்றுப்படி கடவுள், ஆன்மா அல்லது இறுதி யதார்த்தம் பற்றிய கூற்றுக்கள் போன்ற பௌதிகவதீதக் கூற்றுக்கள் இந்த பலவீனமான அர்த்தத்திலும் கூட தோல்வியடைகின்றன. அவற்றை இப்போதும் சரி எதிர்காலத்திலும் சரி எந்தவொரு சாத்தியமான அனுபவத்தாலும் உறுதிப்படுத்தவோ அல்லது நிராகரிக்கவோ முடியாது. இதன் விளைவாக, அத்தகைய கூற்றுகள் அர்த்தமற்றவை என்றும், அவற்றை அடிப்படையாகக்கொண்ட எந்தவொரு அறிவும் வெறும் மாயை அல்லது ஏமாற்று வேலை என்றும், உண்மையான அறிவு அல்ல என்றும் அயர் வாதிடுகிறார்.

பௌதிகவதீதவாதிகளின் முக்கியமான பிரச்சினை என்னவென்றால், அவர்கள் உண்மையில் இல்லாத விடயங்கள் குறித்த பிரச்சினைகளை உருவாக்குகிறார்கள் என்று அயர் வாதிடுகிறார். ஒரு குழுவாக, அர்த்தமுள்ள கேள்விகளைக் கையாள்வதற்குப் பதிலாக ஒருவருக்கொருவர் முரண்பட முயற்சிக்கும்; நேரத்தை வீணடிக்கும் குழப்பமான சிந்தனையாளர்களாக அவர் அவர்களைப் பார்க்கிறார். உதாரணமாக, ஒரு ஓவியத்தின் தன்மை குறித்து ஒரு யதார்த்தவாதிக்கும் ஒரு கருத்துமுதல்வாதிக்கும் இடையிலான முடிவில்லா விவாதத்தைக் கவனியுங்கள். இந்த சர்ச்சை முற்றிலும் தேவையற்றது. ஓவியம் ஒரு புறநிலை யதார்த்தமாக இருப்பதாக யதார்த்தவாதி கூறுகிறார். அதே

நேரத்தில் அது கலைஞரின் மனதில் அல்லது கடவுளின் மனதில் ஒரு கருத்தாக மட்டுமே இருப்பதாக கருத்துமுதல்வாதி கூறுகிறார்.

ஆயினும், அன்றாட வாழ்க்கையில், ஓவியத்தின் இருப்பு குறித்து உண்மையான கருத்து வேறுபாடு இல்லை-இருவரும் அதைப்பார்த்து அதை உண்மையானதாக அங்கீகரிக்க முடியும். அவர்களின் வாதம் படத்தைப் பற்றியது அல்ல; மாறாக அதன் சாராம்சம் அல்லது இறுதி இயல்பைப் பற்றியது; இது மனித மனம் உண்மையிலேயே புரிந்து கொள்ளக்கூடியதைத் தாண்டியதாக உள்ளது என்று அயர் கூறுகிறார். இத்தகைய விவாதங்கள் அனுபவத்திற்கும் அவதானத்திற்கும் அப்பாற்பட்டவை என்பதால், இந்த பௌதிக வதீதச் சர்ச்சைகள் அர்த்தமற்றவை; குழப்பமானவை; உண்மையான அறிவுக்குத் தொடர்பற்றவை அல்லது கற்பனையானவை என்று அயர் முடிவு செய்கிறார்.

மெய்யியலாளனின் உண்மையான வகிபங்கு தெளிவாக வரையறுக்கப்பட்டு, பௌதிக வதீதத்தின் தவறான மற்றும் அர்த்தமற்ற நோக்கங்களிலிருந்து பிரிக்கப்பட வேண்டும் என்று அயர் நம்பினார். அவர் பௌதிகவதீதக் கூற்றுக்களை அர்த்தமற்றதாகக் கருதினார். அவை எந்த நேரடி அல்லது உண்மை அர்த்தமும் இல்லாத கூற்றுகள். உண்மையில், அயர் பௌதிகவதீதத்தை கவிதைக்கும் கீழான நிலையில் வைக்கிறார். அனைத்து கவிதைகளும் அர்த்தமற்றவை அல்ல என்றாலும் - கவிஞர்கள் பெரும்பாலும் தங்கள் தாளம், உணர்ச்சி அல்லது கலை வெளிப்பாட்டிற்காக வேண்டுமென்றே வார்த்தைகளைப் பயன்படுத்துகின்றனர். பௌதிகவதீத கூற்றுகள் உண்மையை வெளிப்படுத்துவது போல் பாசாங்கு செய்கின்றன, ஆனால் அவ்வாறு செய்யத் தவறிவிடுகின்றன.

ஒரு கவிஞர் தெரிந்தே மொழியுடன் விளையாடலாம். ஆனால் ஒரு பௌதிகவதீதவாதி தற்செயலாக முட்டாள்தனத்தில் விழுகிறார். பௌதிகவதீதம் மொழியின் கட்டமைப்பால் அல்லது தவறான பகுத்தறிவால் தவறாக வழிநடத்தப்படுவதால் இது நிகழ்கிறது. இது அவர்களை அபத்தமான கூற்றுக்களை உருவாக்க வழிவகுக்கிறது. உதாரணமாக, பௌதிக உலகம் உண்மையற்றது என்று கூறுவது போன்றவை (Ayer, 1952).

எனவே, அயரின் கூற்றுப்படி, ஒரு மெய்யியலாளனின் கடமை உலகம் எவ்வாறு இயங்குகிறது என்பதை ஆராய்வது அல்லது இயற்கையின் விதிகளை வெளிக்கொணர்வது அல்ல; அது விஞ்ஞானிகளின் வேலை; ஒரு தத்துவ ஞானியின் உண்மையான பணி, மொழியையும் கூற்றுகளையும் பகுப்பாய்வு செய்வதும், உலகை விவரிக்க நாம் வார்த்தைகளை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதை ஆராய்வதும், தர்க்கம், பகுத்தறிவு மற்றும் கணிதம் மூலம் அவற்றின் அர்த்தத்தை தெளிவுபடுத்துவதும் ஆகும்.

**தர்க்கப் புலனறிவாதத்தின் பொதுவான நிலைப்பாடு**

தர்க்கப் புலனறிவாதத்தின்படி, ஒவ்வொரு அர்த்தமுள்ள கூற்றுக்களும் இரண்டு வகைகளில் ஏதோ ஒன்றில் அடங்கும். முதல் வகையில் அவற்றின் அர்த்தம் அல்லது தர்க்க அமைப்பு காரணமாக உண்மை அல்லது பொய்யாக அமையக்கூடிய கூற்றுகள் உள்ளடங்கும். இவை பகுப்புக் கூற்றுக்கள் அல்லது முன்னது ஏதுவான கூற்றுக்கள் என்று அழைக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டுகளில் தர்க்கம் மற்றும் கணிதம் ஆகியவை அடங்கும். இங்கு உண்மை என்பது 'அத்துடன்' 'அல்லது' 'ஆயின்' மற்றும் கணித குறியீடுகள் போன்ற சொற்களின் அர்த்தத்தை மட்டுமே சார்ந்துள்ளன. எந்தவொரு அவதானத்தையோ அல்லது அனுபவத்தையோ சார்ந்தது அல்ல. இரண்டாவது வகையில் உண்மை அல்லது பொய்யை அனுபவத்தின் மூலம் மட்டுமே அறியக்கூடிய கூற்றுகள் உள்ளடங்கும். இவை தொகுப்புக் கூற்றுக்கள் அல்லது பின்னது ஏதுவான கூற்றுகள் என்று அழைக்கப்படுகின்றன. இயற்பியல், உயிரியல் அல்லது உளவியலில் காணப்படும் அனைத்து உண்மையான அறிவியல் கூற்றுகளும் இதில் அடங்கும்.

தர்க்கப் புலனறிவாதிகளைப் பொறுத்தவரை, ஒரு கூற்று வாய்ப்புப்பார்க்கப்பட்டால் மட்டுமே அர்த்தமுள்ளதாக இருக்கும். அதாவது, அனுபவத்தின் மூலமாகவோ அல்லது அர்த்த

பகுப்பாய்வு மூலமாகவோ, அது உண்மையா அல்லது பொய்யா என்பதை நாம் தீர்மானிக்க முடிந்தால் அது அர்த்தமுடையதாகும். வேறு வகையில் கூறுவதாயின் ஒரு கூற்றின் அர்த்தம் அதை வாய்ப்புப்பார்க்கக்கூடிய முறையில் உள்ளது. இது வாய்ப்புப்பார்த்தல் கோட்பாடு என்று அழைக்கப்படுகிறது.

இதன் காரணமாக, பௌதிகவதீதம், சமயம் மற்றும் ஒழுக்கம் பற்றிய கூற்றுகள் அர்த்தமற்றவையாகக் கருதப்படுகின்றன. ஏனெனில் அவற்றை அனுபவம் அல்லது தர்க்கம் மூலம் சோதிக்கவோ வாய்ப்புப்பார்க்கவோ முடியாது. யதார்த்தவாதிகளுக்கும் கருத்துமுதல்வாதிகளுக்கும் இடையிலான வாதம் போன்ற பல பாரம்பரியமான மெய்யியல் விவாதங்களுக்கும் இது பொருந்தும். அவை மொழியைக் குழப்புவதிலிருந்தோ அல்லதுதவறாகப்பயன்படுத்துவதிலிருந்தோ மட்டுமே எழும் போலிப் பிரச்சனைகளாகக் காணப்படுகின்றன.

எனவே, மொழி எவ்வாறு செயல்படுகிறது என்பதைத் தெளிவுபடுத்துவதன் மூலம், மெய்யியலாளர்கள் குழப்பத்தை நீக்கி, பல மெய்யியற் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணலாம். ஏனெனில், மெய்யியலின் முக்கிய நோக்கம் மொழியின் தர்க்கரீதியான பகுப்பாய்வாக இருக்க வேண்டும் என்று தர்க்கப் புலனறிவாதிகள் நம்பினர்.

### தர்க்கப் புலனறிவாத விமர்சனத்தின் பின்னரான பௌதிகவதீதத்தின் நிலைத்திருப்பு

ஒரு சிந்தனைப் பள்ளியாக தர்க்கப் புலனறிவாதம் மெய்யியலில் இருந்து பௌதிகவதீதத்தை நீக்குவதில் அதிக கவனம் செலுத்துவதன் மூலம் ஒரு புரட்சியை ஏற்படுத்த தனது முயற்சியை அர்ப்பணித்தது. தர்க்கப் புலனறிவாதிகள் அனுபவாத சிந்தனைகளால் குறிப்பாக ஹியூமினது சிந்தனைகளால் பெரிதும் கவரப்பட்டிருந்தனர். ஹியூமினது கருத்துப்படி,

> 'நாம்நம்கைகளில்எந்தத் தொகுதியையும் எடுத்துக் கொண்டால் உதாரணமாக தெய்வீகம் அல்லது பௌதிகவதீதம், அதில் அளவு அல்லது எண் தொடர்பான ஏதேனும் நியாயித்தல் உள்ளதா என்று கேட்போம்? இல்லை. உண்மை மற்றும் இருப்பு பற்றிய ஏதேனும் பரிசோதனை நியாயித்தல் உள்ளதா? இல்லை. அப்படியென்றால் அவற்றுக்கு தீயிட்டு அழியுங்கள். ஏனென்றால் அதில் சூட்சுமம் மற்றும் மாயையைத் தவிர வேறு எதுவும் இருக்க முடியாது' (Udefi, 2009, p. 8).

தர்க்கப் புலனறிவாதிகள் ஒவ்வொரு உண்மைக் கூற்றும் அனுபவத்தின் மூலம் வாய்ப்புப்பார்க்கப்பட வேண்டும் என்று கூறுகின்றனர். இருப்பினும், இந்த நிலைப்பாடு ஒரு கடுமையான சிக்கலை எழுப்புகிறது: அவர்களின் சொந்த வாய்ப்புப்பார்த்தல் கோட்பாட்டினை வாய்ப்புப்பார்க்க முடியுமா? அதாவது அவர்களின் விதியை நாம் தொடர்ந்து பயன்படுத்தினால், 'அனைத்து உண்மைக் கூற்றுகளும் அனுபவரீதியாக வாய்ப்புப்பார்க்கப்பட வேண்டும்' என்ற கூற்றை அனுபவ ரீதியாக எவ்வாறு நிரூபிக்க முடியும்? என்று நாம் கேட்க வேண்டும். இந்தக் கொள்கையே அனுபவத்தால் சோதிக்கப்பட முடியாததால், அது அதன் சொந்த அர்த்தத் தரத்தை தோல்வியடையச்செய்கிறது. இந்தவகையில், தர்க்கப் புலனறிவாதிகள் ஒரு வகையான சுய முரண்பாட்டில் மாட்டிக் கொள்கிறார்கள். அவர்களின் வாய்ப்புப்பார்த்தல் கோட்பாடு மற்றவர்கள் மீது விதிக்கும் அளவுகோலை தன்னளவில் பூர்த்தி செய்ய முடியாது.

இதற்கு பதிலளிக்கும் விதமாக, W.V.O.குயின், 'இரண்டு அனுபவவாதக் கோட்பாடுகள்' என்ற தனது புகழ்பெற்ற கட்டுரையில், தர்க்கப் புலனறிவாதத்தின் மையக் கருதுகோள்களில் ஒன்றான பகுப்புக் கூற்று மற்றும் தொகுப்புக் கூற்று என்பவற்றுக்கிடையிலான தெளிவான வேறுபாட்டினைச் சவால் செய்தார். அத்தகைய வேறுபாடு அறிவு நடைமுறையில் எவ்வாறு செயல்படுகிறது என்பதை உண்மையில் பிரதிபலிக்கவில்லை என்று குயின் வாதிட்டார். எங்கள் நம்பிக்கைகள் மற்றும் கூற்றுக்கள், அனுபவத்திற்கு எதிராக ஒவ்வொன்றாக சோதிக்கப்படுவதில்லை, மாறாக ஒரு முழு அமைப்பாக சோதிக்கப்படுகின்றது என்று அவர் கூறினார். அனுபவம் நமது எதிர்பார்ப்புகளுக்கு முரணாக இருக்கும்போது,

அந்த அமைப்பின் எந்தப் பகுதியையும் சரி செய்ய அறிவியல் கோட்பாடுகள் முதல் தர்க் கரீதியான கொள்கைகள் வரை எதனையும் நாம் தேர்வு செய்யலாம். எனவே, எந்தக் கூற் றும் திருத்தத்திற்கு அப்பாற்பட்டது அல்ல.

மாதிரித் தர்க்கத்தினதும் பகுப்பாய்வுப் பௌதிகவதீதத்தினதும் எழுச்சி இங்கு குறிப் பிடத்தக்க அம்சங்களாக அமைகின்றன. தர்க் கத்தில் ஏற்பட்ட வளர்ச்சிப் போக்குகள் குறிப் பாக மாதிரி தர்க்கத்தின் வளர்ச்சியானது சாத் தியப்பாடு, அத்தியாவசியம், அடையாளம் மற்றும் சாராம்சம் போன்ற பௌதிகவதீதக் கருத்துக்களை மீண்டும் தத்துவ ரீதியாக மரியாதைக்குரியதாக மாற்றியது. சவுல் கிரிப்கேவின் (Saul Kripke) பெயரிடுதலும் அத்தியாவசியமும் (1980) என்ற நூல் பௌதிக வதீதத் தேவைகள் பின்னது ஏதுவானவை யாக இனங்காணப்பட முடியும் என்பதனை நிரூபித்தது. இது பௌதிகவதீதக் கேள்வி களைப் பகுப்பாய்வு செய்யக் கடுமையான முறையான கருவிகளை வழங்குவதன் மூலம் பகுப்பாய்வு மெய்யியலினுள் பௌதிகவதீ தத்தை புத்துயிர் பெறச்செய்தது.

விஞ்ஞானம்கூட பௌதிகவதீதத்தினை முன் னிறுத்துகிறதுஎன்பதனைஉணர்தல்பௌதிக வதீதத்தின் நிலைத்திருப்பினை எடுத்துக்காட் டும் மற்றுமோர் அம்சமாகும். பின்னைப்புலன றிவாத விஞ்ஞான மெய்யியலாளர்கள் (எ.கா., கூன் (Kuhn), புட்னம் (Putnam) மற்றும் லக்கா டோஸ் (Lakatos) விஞ்ஞானத்தில் கோட்பாட் டுத் தேர்வு என்பது பௌதிகவதீத ஊகங் களைச் சார்ந்துள்ளது என்பதனை எடுத்துக் காட்டினர். இந்த ஊகங்களுள் உண்மையான வெளிப்புற உலகின் இருப்பு, காரணத்தின் அமைப்பு, கோட்பாட்டு இயல்புகள் என்பன முதன்மையானவையாகும். ஹிலாரி புட்னம் (1975) பௌதிகவதீத யதார்த்தவாதம் விஞ் ஞானயதார்த்தவாதத்துடன்பின்னிப்பிணைந் துள்ளது என்று வாதிட்டார். விஞ்ஞானம் கோட் பாடுநிறைந்ததாகவும்மதிப்புநிறைந்ததாகவும் அமையப்பெறும்போது, விஞ்ஞான யதார்த் தத்திற்கு அடிப்படையான ஊகங்கள் பற்றிய விசாரணையாக பௌதிகவதீதம் மீண்டும் அந்தஸ்தினைப் பெற்றுக்கொள்கின்றது.

பகுப்பாய்வு மெய்யியல் இருபதாம் நூற் றாண்டின் பிற்பகுதியிலிருந்து அடையாளம், பண்புகளும் பொதுமைகளும், சுதந்திரம், உணர்வு, அடிப்படை மற்றும் அடிப்படை வாதம் போன்ற பௌதிகவதீதத் தலைப்பு களில் புதுப்பிக்கப்பட்ட ஆர்வத்தை வெளிப் படுத்தியது. டேவிட் லூயிஸ் (David Lewis) (1986) மற்றும் கிட் ஃபைன் (Kit Fine) (2001) போன்ற மெய்யியலாளர்கள் துல்லியமான வாதங்கள் மற்றும் முறையான கருவிகளைப் பயன்படுத்துவதன் மூலம் பௌதிகவதீ தத்தை முதன்மைக்குரியதும் மரியாதைக்குரி யதுமான ஒரு துறையாக நிறுவ உதவினார் கள்.

### முடிவுரை

இறுதியில், தர்க்கப் புலனறிவாதிகளான கார்னப் மற்றும் அயர் ஆகியோர் பௌதிக வதீதத்தை நீக்குவதில் உண்மையிலேயே வெற்றி பெற்றார்களா? இல்லையா? எனின் அவர்கள் அதில் வெற்றி காணவில்லை என்றே கூறவேண்டும். அதை அர்த்தமற்றது என்று நிராகரிக்க அவர்கள் முயற்சித்த போதிலும், பௌதிகவதீதம் மெய்யியலின் ஒரு தவிர்க்கமுடியாத கிளையாக தொடர்ந்து நீடிக்கிறது.

தர்க்கப் புலனறிவாதிகளின் மெய்யியல் அடித் தளங்கள் உள்ளார்ந்தமாக நிலையற்றவை, விஞ்ஞான ரீதியாக நிலைத்திருக்க முடியா தவை என்பதோடு அவை மனித அறிவின் சிக்கலான தன்மையைப் புரிந்துகொள்ளும் விடயத்தில் மிகவும் குறுகியவை என்பத னால், பௌதிகவதீதம் புலனறிவாதத் தாக் குதலிலிருந்து தப்பித்தது. பகுப்பாய்வு மெய்யியல் முதிர்ச்சியடைந்தவுடன், தர்க்கம், மொழி மெய்யியல் மற்றும் விஞ்ஞான மெய்யியல் என்பவற்றின் வளர்ச்சிகளால் ஆதரிக்கப்படும் பிரபல்யமான துறையாக பௌதிகவதீதம் மீண்டும் வெளிப்பட்டது. இன்று பௌதிகவதீதம் மெய்யியல் ஆராய்ச் சிகளின் மிகவும் செயல்நிலைத்தான பகுதி களில் ஒன்றாக உள்ளது. இவ்வாய்வானது தர்க்கப் புலனறிவாதிகள் பௌதிகவதீதத்தை மெய்யியல் ஆய்வுப்புலங்களில் இருந்து நீக்குவதில் தோல்வியுற்றனர் என்பதனை

திடமாக வெளிக்கொணர்ந்துள்ளது. எனினும் தர்க்கப் புலனறிவாதிகளின் வாதங்களுக்கு எதிரான பௌதிகவதீதவாதிகளின் பிரதி வாதங்கள் தெளிவான பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்பதனை இந்த ஆய்வு பரிந்துரைக்கின்றது.

**References**


Avrum, S. (2000). Twentieth Century Analytic Philosophy. New York: Columbia University Press.

Ayer, A. (1952). Language Truth and Logic. New York: Dover publications Inc.

Carnap, R. (1947). Meaning and Necessity: A Study in Semantics and Modal Logic. (A. Pap, Trans.) Chicago: University of Chicago Press.

Fine, K. (2001). The question of realism. Philosophers' Imprint, 1(1), 1-30.

u;ernan, K. (1958). The Metaphysics of St. Thomas Aquinas. Milwaukee: The Bruce Publishing Company.

Kripke, S. (1980). Naming and necessity. Harvard: u;arvard University Press.

Lewis, D. (1986). On the plurality of worlds. Oxford: Oxford University Press.

Pierre, C. (2004). Language Truth and Logic. Richmond Journal of Philosophy, 6(Spring), 1-12.

Price, H. (2007). Methaphysics After Carnap: The Ghost W}o Walks? Australian Research Council, 2(September), 1-25.

Prosch, H. (1966). The Genesis of Twentieth Century Philosophy. New York: Double Day and Company, Inc.

Putnam, H. (1975). Mind, language, and reality. Cambridge: Cambridge University Press.

Quine, W. V. (1951). Two dogmas of empiricism. The Philosophical Review, 60(1), 20-43.

Reith, H. (1958). The Metaphysics of St. Thomas Aquinas. Milwaukee: The Bruce Publishing Company.

Singer, P. (1995). Hegel. In H. Ted, & u;. Ted (Ed.), The Oxford Companion of Philosophy. New York: Oxford Press University.

Udefi, A. (2009). Metaphysics and the Challenge of Logical Positivism: An Interrogatioin. Journal of Social Science, 21(1), 7-11.

Wittgenstein, L. (1921). Tractatus Logico-Philosophicus. (G. E. Anscombe, Trans.) London: Routledge Press.